கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2013/2014 (January/February 2018)

# GYS 3123 குடித்தொகைப் புவியியல் (Population Geography)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து மூன்று வினாக்களையும் பகுதி II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1. அ) "ஒரு நாட்டின் அபிவிருத்தி திட்டமிடலின்போது குடித்தொகை தரவுகள் இன்றியமையாதனவாகவுள்ளன" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

   ஆ) இலங்கையில் குடித்தொகை தரவுகள் பெறப்படும் முறைகளை சுருக்கமாகக் குறிப்பிட்டு, அதில் குடிக்கணிப்பு முறை தொடர்பில் ஆராய்க. (12 புள்ளிகள்)

2. அ) கருவளம் என்ற பதத்தினை அதன் அளவீடுகளுடன் வரைவிலக்கணப்படுத்துக. (06 புள்ளிகள்)

   ஆ) ஒரு நாட்டின் குடித்தொகை மாற்றத்திற்கு கருவளத்தின் பங்களிப்பு தொடர்பில் ஆராய்க. (14 புள்ளிகள்)

3. அ) இறப்பு வீதத்தைத் தீர்மானிக்கும் காரணிகளை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

   ஆ) இறப்புக்களை அளவீடு செய்யும் முறைகள் தொடர்பாக விளக்குக. (06 புள்ளிகள்)

   இ) "வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் பலவற்றில் இன்று இறப்புவீதமானது வீழ்ச்சியடைந்துவரும் நிலை காணப்படுகின்றது." இக்கருத்திற்கான காரணிகளை தரவுகள், உதாரணங்கள் மூலம் விளக்குக. (11 புள்ளிகள்)

4. அ) குடித்தொகை நிலைமாறு கோட்பாடு (Demographic Transition Theory) என்பதால் கருதப்படுவது யாது? (03 புள்ளிகள்)

ஆ) குடித்தொகை நிலைமாறல் கட்டங்களை வரைபடத்தின் துணையுடன் விளக்குக (09 புள்ளிகள்)

இ) குடித்தொகை பண்புகளை விளக்குவதற்கு குடித்தொகை நிலைமாறல் கோட்பாடு இன்றைய காலகட்டத்தில் எந்தளவுக்கு பொருத்தப்பாடுடையது என்பது தொடர்பா கருத்துரைக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

5. குடித்தொகைப் பரம்பல் வேறுபடுவதற்கான காரணங்களை கூடிய குடிச்செறிவு , குறை குடிச்செறிவு கொண்ட பிதேசங்களை எடுத்துக்காட்டி விளக்குக. (20 புள்ளிகள்)

6. "அதிகரித்து வருகின்ற குடித்தொகையானது அதிகளவு வளப்பாவனைக் இட்டுச்செல்வதுடன் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஏற்படுத்தி வருகின்றது இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளை ஆதாரங்காட்டி ஆராய்க. (20 புள்ளிகள்)

7. "குடித்தொகை வளர்ச்சியினால் பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகள் ஏற்படு என்பதனை அடிப்படையாகக் கொண்டு உருவான கோட்பாடாக மால்தூசி குடித்தொகைக் கோட்பாடு காணப்படுகின்றது" இதனடிப்படையில் அக்கோட்பாட்டினை விளக்குவதுடன், இன்றைய காலகட்டத்தில் அதன் பொருத்தப்பாட்டினையும் விளக்குக. (20 புள்ளிகள்)